www.tamilarangam.net

# அறிவோர் பக்கம்

ஆவணி- 98.

## அறநெறி.

காந்த ஊசியானது எப்பொழுதும் வடக்கு நோக்கியே நிற்கின்றது. ஆதலால் தான் கடலில் செல்லும் கப்பல் தவறுவதில்லை. மனிதனுடைய உள்ளம் கடவுளையே நோக்கியதாக இருக்கும் வரையில் பற்று ஆகிய சமுத்திரத்தில் அவன் வழி தவறித் தடுமாறமாட்டான் .

( இராமகிருஷ்ணர்–வாழ்வும் வாக்கும் )

## நல்லன செய்க.

உழைப்பவர் எப்படியும் முன்னுக்கு வருவர் இது நியதி . இன்று பெருமையுடன் வாழ்பவர் எல்லோரும் ஒருமையுடன் உழைத்து உயர்ந்தவர்தான். அதனை அறிதல் நலம். அதனைக்கண்டு அழுக்காறு கொள்வதில் மேம்பாடு இல்லை. உழைக்காமல் யாரும் முன்னுக்கு வருதல் இல்லை நல்ல தொழில் அவர் வீடு மிக்க எழில், அவர் சுற்றித் திரிவது பொழில் , பொழுது கழிவது நறு நிழல். இவற்றிற்கு எல்லாம் காரணங்கள் உள்ளன. காரணம் இல்லாமல் காரியம் நிகழ்வது இல்லை. கருக் கொள்ளாமல் எதுவும் உருப்பெறுவது இல்லை. சிந்தித்துப் பார். உன்னை நீ திருத்திக்கொள். நல்லதே செய்க நன்மையே விளையும்.

( நாலடியார் செய்திகள் )

## தனித்து நில்லுங்கள்.

உலகின் மகத்தான சாதனைகள் எல்லாம் சாதாரண திறமை படைத்தவர்களாலேயே பெரும்பாலும் சாதிக்கப்படுகிறது. அவர்களது வெற்றிக்கு காரணம் விடாமுயற்சிதான். தொடர்ந்த முயற்சிதான். எதைக் கண்டும் சளைக்காத மனம். தொடர்ந்து அந்தக் காரியத்தில் மீண்டும் மீண்டும் ஈடுபடும் மனப்பக்குவம். ஒரு காரியத்தில் வெற்றி தோல்வியைக் கருதாது தொடர்ந்து ஈடுபட ஒரு மனப்பக்குவம் தேவை. ஒரு மன உறுதி தேவை.

( ம. ட. பா. )

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒவ்வொருவைய விட முயற்சிக்கு அடுத்தபடியாக அவரிடம் ஒரு நம்பிக்கை இருந்தது. கடைசிவரை தனித்து நிற்கும் ஒரு துணிச்சல் இருந்தது. அடுத்தவன் பெரியவன் என்ற எண்ணத்தினால் அவர்கள் தங்களைத் தாங்களே சிறுமைப்படுத்திக் கொள்ளவில்லை. அவர்கள் தங்களைப் பிறருடன் ஒப்பிட்டுக் கொண்டு அற்ப சந்தோஷங்களில் ஈடுபடுவோ அல்லது தங்களுக்கிருக்கும் சாதாரண நிலையற்றி அவர்கள் துக்கமோ படுவதில்லை. அவர்கள் பிறருக்காக வாழுவதில்லை. தங்களுக்காக வாழ்கிறார்கள்.

நம்மில் பலர் பிறருக்காக வாழ்கிறார்கள். அடுத்தவர் என்ன நினைப்பாரோ என்று கவலைப்படுகிறார்கள். நாம் செய்வதை அவர்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்களோ என்ற பயம் அவர்களை ஆட்டிப்படைக்கிறது.

ஏன் இப்படிச் செய்கிறார்கள் ?

தன்னம்பிக்கையின்மைதான். அவர்களுக்கு சுயமதிப்புக் கிடையாது. தன்னைப்பற்றிய கௌரவம் இருக்காது. ஆகவே பிறரைச் சார்ந்து கௌரவம் பெற முயல்கிறார்கள். இப்படி வாழ்க்கை நடத்தக் கூடாது. நாம் நமக்காக வாழவேண்டும்.

இயேசு கிறீஸ்து சொன்னார் தனது பன்னிரண்டு சீடர்களிடை " எல்லா நாடுகளுக்கும் செல்லுங்கள் அவர்களுடன் கலந்து பழகுங்கள். அவர்கள் மொழியை கற்றுக்கொள்ளுங்கள். அவர்கள் மொழியிலேயே அவர்களுக்குப் புரியுமாறு உபதேசம் செய்யுங்கள். நல்வழி காட்டுங்கள்" என்றார். அதனால் தான் கிறீஸ்தவ சமயம் உலகின் எல்லாப் பாகங்களிலும் இன்று பரவியிருக்கிறது. பயிலப்படுகிறது.

பிறர் தரும் ஆமோதிப்பு போய்விடும் என்று பயந்திருந்தால் மகாத்மா காந்தி அரைஞாண் வேஷ்டியை இடுப்பில் சுற்றியிருக்க மாட்டார்.

தனித்து நின்றுதான், துணிச்சலோடு நின்றுதான் மகத்தான சாதனைகளும், மகத்தான புரட்சிகளும் உலகில் நிகழ்ந்திருக்கின்றன. சுயமாக சிந்தியுங்கள், தனித்து நில்லுங்கள். முதலில் எண்ணங்களில் புரட்சி நிகழட்டும்.

( தன்னம்பிக்கையும் உயர்தர நெறிகளும் )

www.tamilarangam.net

அடுத்த வீட்டு அன்னாசாமியோ அவர் மனைவி அம்புசமோ என்ன செய்கிறார்கள் என்று பார்த்து விட்டு அதேபோல் எல்லாம் தங்கள் வீட்டிலும் செய்ய வேண்டும் என்று ஆசைப்படும் பெண்கள் உலகில் அதி கம். அவர்கள் எல்லாம் சுயத்தன்மை இல்லாதவர்கள். சொந்தக் கற்பனை இல்லாதவர்கள். பிறரது ஆமோதிப்பை எதிர்பார்த்து ஏங்குபவர்கள். பிறரது ஆமோதிப்பில் மகிழ்ச்சி காண்பவர்கள். பிறர் தங்கள் வாழ்க்கையை நடத் துமாறு விட்டு விடுபவர்கள்.

## ஆழமுடையதாகச் சிந்தித்துப் பேசுக.

பேச்சில் ஆழம் இருக்க வேண்டும். அது சிந்தித்துப் பேசும் பேச்சில் சித்திக்கும்.

### இதோ ஓர் உதாரணம் :-

சகுந்தலை தன் மகனுடன் துஷ்யந்தனுடைய அரசவைக்குச் சென்றாள். துஷ்யந்தன் " பெண்ணே நீ யார் ? உன் கண வன் யார் ? இம்மைந்தன் யார் ? இங்கு ஏன் வந்தாய் ? என்றெல்லாம் வினவினான்.

அதற்கு சகுந்தலை சொன்ன விடை " மகனே பரதா ! உன் தந்தையை வணங்கு " என்றாள். மன்னவன் வினவிய வினாக்கள் அத்த னைக்கும் இதில் விடையிருப்பதை ஆழ்ந்து சிந்தியுங்கள்.

( வாழ்க்கையில் முன்னேற வழியர் வங்கு )

## குறள் விளக்கம்.

"அன்பறிவு ஆராய்ந்த சொல்வன்மை தூதுரைப் பார்க்கு
இன்றி யமையாத மூன்று "

அன்பு, அறிவு, ஆராய்ந்து சொல்கின்ற சொல்வன்மை ஆகிய இவை தூது உரைப்பவர்க்கு இன்றியமையாத மூன்று பண்புகளாம்.

( திருக்குறள்–682 )

"எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு"

எந்தச் செய்தியை யார் கூறக்கேட்டாலும் கூறியவர் யார் என்று பாராமல் அச்செய்தியில் உள்ள உண்மையை ஆராய்ந்து அறிவதே சிறந்த அறிவாகும்.

( திருக்குறள்–429 )

www.tamilarangam.net

## அருள் வாக்கு.

நெடுங்காலப் பயிராகவும், எதிர்காலத்து உத்தரவாதமாகவும், தர்மீயப் பாதுகாப்பாகவும் இருக்கிற விவாகம் என்ற விஷயத்தில் பெரியவர்கள் பார்த்துப் பெண்ணை நிச்சயம் செய்கிறபடிதான் பிள்ளைகள் செய்யவேண்டும். ஆனால் அந்தப் பயிரையே பூச்சி அரிக்கிறமாதிரி வந்திருக்கிற வரதட்சணைக் கொடுமைக்கு உடந்தையாக இருந்துவிடக்கூடாது. அப்பா, அம்மா சொற்படி கேட்பதோடு சமூகத்துக்கு செய்யவேண்டிய கடமையும் இருக்கிறதல்லவா? வரதட்சணை கேட்டால் கல்யாணத்துக்கு கண்டிப்பாக மறுத்துவிட வேண்டியது பிள்ளைகளின் கடமை.

இது குடும்பத்துக்கு, மதத்துக்கு, சமூகத்துக்கு, பெண் குலத்துக்கு எல்லாவற்றுக்கும் செய்கிற தொண்டு. இப்படியாக இளைஞர்கள் எல்லோரும் சபதம் செய்து அதை நிறைவேற்ற வேண்டும்.

( ஸ்ரீ காஞ்சி காமகோடி பரமாச்சார்ய சுவாமிகள் )

## பழமொழி விளக்கம்.

"சேரிட மறிந்து சேர்."

பெருமையுடையவர்களுடன் சேர்வது பெருமைதரும். அஃது அவனை உயர்த்தும் வளர்ச்சிக்கும் வழி வகுக்கும். ஒளி பெற்றுத் திகழ்வான். அந்த நட்பு வளர்பிறை போன்றது. தீயவரோடு நட்பு தேய்பிறை போன்றது.

## மருத்துவம்.

வயதானவர்கள் லொக் லொக்கென்று இருமிக்கொண்டிருந்தால் வெங்காயத்தை வதக்கி வெல்லம் கலந்து கொடுத்தால் இருமல் சுகமாகும்.

இரவில் தூக்கம் வரவில்லையே என்று கவலைப்படாதீர்கள். வெங்காய ரசத்துடன் சம அளவு நீர் கலந்து குடித்துவிட்டுப் படுங்கள். அசந்து தூக்கம் வரும். நிம்மதியாகத் தூங்கலாம்.

www.tamilarangam.net

## நல்வழி.

"பிச்சைக்கு மூத்த குடிவாழ்க்கை பேசுங்கால்
இச்சை பல சொல்லி இடித்து உண்கை – சிச்சீ
வயிறு வளர்க்கைக்கு மானம் அழியாது
உயிர் விடுகை சால உறும்."

உழைத்து உண்ணாமல் பிறரிடம் கையேந்திப் பிச்சையெடுத்து வாழ்வது இழிவானதாகும். இதைவிட இழிவான வாழ்க்கையும் இருக்கிறது. நல்ல நல்ல முறையில் இல்லறம் நடத்துவதே குடி வாழ்க்கை எனப்படும். ஒருவரை நாடிச் சென்று அவரை முறையற்ற முறையில் புகழ்ந்து போற்றி இச்சை வார்த்தைகள் பல பேசி, அவரிடம் இடிபட்டு அவர் தரும் பொருளைக் கொண்டு குடித்தனம் செய்வது கேவலமானது ஆகும். வயிற்றை வளர்ப்பதற்காக அப்படி மானம் மரியாதையை விட்டு விடுவதா ? இது பிச்சை எடுப்பதைவிட மிகவும் கேவலமான காரியம் ஆகும். உயிரைக் காப்பதற்காக மானத்தை இழப்பதை விட , மானத்தைக் காப்பதற்காக உயிரை இழப்பது மிகவும் சிறப்புடையதாகும். மானம் மரியாதையைப் போற்றிப் பாதுகாத்து உழைத்து உண்ண வேண்டும்.

## பொறாமை.

நாம் ஒரு விஷயத்தை உணரவேண்டியது அவசியம். நெடுங்காலமாக நாம் பொறாமையில் மூழ்கிக் கிடக்கிறோம். இதுக்கு ஏன் அதிக மரியாதை கிடைக்கிறது ? நான் ஏன் அதைப் பெறக் கூடாது ? என்ற இவ்விதமான பொறாமை நம் மனதில் நிறைந்திருக்கிறது. கடவுள் ஆராதனை நடக்கும் இடங்களில் கூட நாம் மற்றவர்களுக்கு முன் நிற்க விரும்புகிறோம். இதை விட கேவலமான அடிமை உணர்ச்சி வேறு என்ன இருக்க முடியும். இப் பொறாமையை அகற்ற வேண்டும். எல்லோரும் அதிகாரம் செய்ய விரும்புகிறார்கள். ஒருவரும் சேவை செய்ய விரும்புவதில்லை. முதலில் கீழ்ப்படியத் தெரிந்து கொள்ளுங்கள். அதற்குமேல் அதிகாரம் தானே வரும். முதலில் தொண்டர்களாயிருக்கக் கற்றுக் கொள்ளுங்கள். அதன் மூலம் தலைவராகும் தகுதி பெறுவீர்கள். பொறாமையை மனதிலிருந்து அகற்றினால் , மகத்தான காரியங்களைச் செய்யக்கூடிய சக்தி உங்களுக்கு உண்டாகும்.

www.tamilarangam.net

## உலக நீதி.

பேச்சில் இருவகை உண்டு. ஒன்று பயனுடைய பேச்சு, மற்றொன்று பயனற்ற பேச்சு. பயனில்லாதவற்றைப் பேசுவதை விரும்பி அவர்பின்னே சென்றுகொண்டிருக்கக் கூடாது. தன் மானம் மிகவும் முக்கியமான ஒன்றாகும். நாமும் மற்றவர்களை மதிக்க வேண்டும். மற்றவர்களும் நம்மை மதிக்க வேண்டும். நம்மை அன்புடன் வரவேற்று மதிப்பவருடைய வீட்டிற்குத்தான் நாம் செல்ல வேண்டும். நம்மை அலட்சியப் படுத்துகின்றவர்களின், அவமதிக்கின்றவர்களின் வீட்டு வாசலைக்கூட மிதிக்கக் கூடாது. பெரியவர்கள் அறிவிலும் அனுபவத்திலும் சிறந்து விளங்குபவர்கள். அவர்களுடைய அறிவுரையும், ஆலோசனையும் பயனுடையவை ஆகும். எனவே பெரியவர்களின் சொற்களைக் கேட்டு அதன்படி நடக்க வேண்டும். அவர்களின் வார்த்தைகளை மறுக்கக் கூடாது. எதையும் அமைதியாகக் கேட்டு ஆராய்ந்து பேசும் பண்புடையவர்கள் முன்கோபம் கொள்ள மாட்டார்கள். அவசரப்பட்டு ஆராயாமல் பேசும் குணம் கொண்டவர்களே முன்கோபம் அடைவார்கள். கோபம் விபரீத விளைவிற்குக் காரணமாகும். ஆகையால் முன்கோபம் உடையவர்களோடு நட்புக் கொள்ளக் கூடாது.

## எந்தப் பொருள் மதிப்பையும், அதை இழந்தாலன்றித் தெரிந்து கொள்ள முடிவதில்லை.

"இந்து மதத்தில் எந்த இரகசியக் கொள்கைக்கும் இடமில்லை. இரகசியம் என்றாலே ஏதோ தவறை மறைக்கும் முயற்சிதான். அது பலவீனத்திற்கு அடையாளம். குருட்டுத்தனமானது.

அறிவுபூர்வமாக விளக்க முடியாதது என்று எதுவும் இந்த உலகில் இல்லை. ஆன்மீகத்தில் எந்த இரகசிய வழியும் இருக்கக்கூடாது. கடவுள் இரகசியப் பொருள் அல்ல. அவர் பட்டப்பகலை விட, பேரொளியை விட, சூரியனை விட வெளிப்படையானவர்.

உலகியலில் பலவீனமாக இருக்கும் ஒருவன் குறுக்கு வழிகளைக் கையாள்கிறான். ஆன்மீகத்தில் பலவீனமாக இருப்பவன் மதத்தின் பெயரால் இரகசியம் என்று சொல்லப்படுவதை நாடுகிறான்."

"ஒழுங்கு தவறிய இடத்தில் பயன் இருந்தாலும் மதிப்புக் கிடையாது"

"நல்ல மரங்கள் நல்ல கனியைக் கொடுக்கும். நல்ல மக்கள் நல்லதையே செய்வார்கள்."

www.tamilarangam.net

# பொறுமையாக இருந்தால் தெய்வமாகலாம்.

முத்தி அடைந்தவர்கள் எல்லோரும் கொஞ்சமான பாடாய்ப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் பட்டபாடு சொல்ல முடியாது. அப்படிப் பாடுபட்டுத்தானா முத்தி அடையவேண்டும். சுலபமான வழி கிடையாதா? என்று ஒருவர் கேட்டார்.

அதற்கு ஓர் உதாரணம் இதோ:—

கோவில் அர்ச்சகர் ஒருவர் இரவு பூசை முடிந்தபிறகு, கோயிலின் கதவைப் பூட்டிவிட்டு தமது வீட்டிற்குத் திரும்பிச் சென்றுகொண்டிருந்தார். அந்தக் கோயில் கட்டி முடிந்து ஒரு வருடம் தான் ஆகியிருந்தது. அன்றைய தினம் ஏதோ ஒரு விசேட நாள். ஆதலால் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வந்து அந்த ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவனை வணங்கிச் சென்றார்கள்.

இரவு பன்னிரெண்டு மணிபோல், தரையிலிருந்து ஓர் அகலமான கரடுமுரடான கல், இறைவனின் விக்கிரகத்தைப் பார்த்து பேச ஆரம்பித்தது.

"ஏ விக்கிரகமே, உனக்கு நினைவிருக்கிறதா? இரண்டு வருடங்களுக்கு முன்பு நாம் இருவரும் ஒரே பாறையில்தான் இருந்தோம். இன்று உன்னை ஆயிரக்கணக்கான மக்கள் விழுந்து வணங்குகிறார்கள் ஆனால் என்னைக் காலால் மிதித்து விட்டுப் போய்விடுகிறார்கள். இங்கு வருகிறவர்கள், போகிறவர்கள் கால்களிலெல்லாம் நான் அடிபட்டுக் கொண்டிருக்கிறேன். இது என்ன நியாயம்?" என்று கேட்டது.

தெய்வ விக்கிரகம் புன்சிரிப்பு சிரித்தபடியே பதில் கூறியது. "நண்பனே! நாம் இருவரும் ஒன்றாக வாழ்ந்தது எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. ஆனால் நீதான் நடந்ததை எல்லாம் மறந்து விட்டாய். அன்று ஒருநாள் ஸ்தபதி ஒருவர் நாம் இருந்த இடத்திற்கு நான்கு ஆட்களுடன் வந்திருந்தார். அந்த ஆட்களில் ஒருவரை அழைத்து உன்னை உளியால் அடிக்கச் சொன்னார். ஓர் அடி அடித்தவுடனேயே நீ எட்டுத் துண்டுகளாகச் சிதறிவிட்டாய்.

பிறகு அவர் என்னிடம் வந்து என்னையும் உளியால் அடிக்கச் சொன்னார். உளியின் அடி பளீரென்று என்மீது விழுந்தபோது நான் அதைப் பொறுமையோடு தாங்கிக் கொண்டேன். அதைப் பார்த்து அவர்கள் மகிழ்ச்சியடைந்தார்கள். என்மீது ஆர்வம் காட்டினார்கள். பிறகு ஸ்தபதியின் நான்கு ஆட்களும் சரமாரியாக கண்ட இடங்களிலெல்லாம் அடித்தனர். அவர்கள் அடித்த அடிகளையும் பொறுமையுடன் சகித்துக் கொண்டேன். பிறகு என்னைத் தேர்ந்தெடுத்து விக்கிரகம் செய்தார்கள்.

ஓர் ஊசி அளவு கூட இடம் விடாமல் என்னை முழுமையாக அடித்துக் கொண்டே இருந்தனர். என்மீது கண், மூக்கு, வாய் போன்ற பல வடிவங்களைச் செதுக்கினார்கள். அவ்வாறு அவர்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அடித்த அத்தனை அடிகளையும் சிறிது கூட முணுமுணுப்பின்றி தாங்கிக் கொண்டேன். என்னை ஒரு விக்கிரகமாகச் செதுக்கி வடிவம் அமைத்த பிறகு மக்கள் வழிபடுவதற்கு பிரதிஷ்டை செய்தார்கள். நீ அவர்கள் அடித்த ஒரே அடிக்கு பல துண்டுகளாக சிதறி விட்டாய். அவர்கள் அடித்த அந்த ஓர் அடியைக் கூட நீ தாங்கிக் கொள்ளத் தயாராக இல்லை. எனவே உன்னை எடுத்து நடப்பதற்குப் பயன்படுத்தும் கல்லாகப் பதித்தார்கள். இது யாருடைய தவறு? " என்று விக்கிரகம் கேட்டது.

இறைவன் நம்மை சோதனைகளின் மூலமாகப் பரீட்சித்துப் பார்க்கிறார். நாம் மனம் தளர்ந்து விட்டால் தோற்றுவிடுகிறோம். வரும் சோதனைகளைச் சவாலாக ஏற்றுக்கொண்டு இறைவனிடம் முழு நம்பிக்கை வைத்து, அவரிடம் பூரண சரணாகதி அடைந்தால் அவரது அன்புக்கும், அருளுக்கும் தகுதி பெற்றவர்களாகிறோம்.

சோதனை வரத்தான் செய்யும். சோதனை வருகிறதே என்று கவலைப்படக் கூடாது. தீவிர அருள் தாகம் இருப்பவனுக்கு ஆண்டவன் அருள் தவறாமல் கிட்டும். அவன் முயற்சியும் வீணாகாது.

## வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான்

**ஆயினும் எமக்கு வாசிப்பதற்குரிய சந்தர்ப்பங்கள் குறைவு. கிடைக்கும் சந்தர்ப்பங்களிலும் பெரிய பெரிய புத்தகங்களைப் படிப்பதற்குரிய மனப்பக்குவமும் பொறுமையும் வாய்ப்பதில்லை. இச்சந்தர்ப்பத்தில் அவ்வப்போது படித்த, எல்லோருக்கும் பயன் படக்கூடியன என்று கருதும் விடயங்கள் சில இங்கு தொகுக்கப்பட்டுள்ளன. இது ஒரு சிறு ஆரம்ப முயற்சிதான்.**

நீங்கள் படித்தவைகளுள்ளும் பிறருக்குப் பயன் படும் எனக் கருதுபவைகளை அறிவோர் பக்கத்திற்குச் சேர்ப்பியுங்கள். காலப்போக்கில் அறிவோர் பக்கம் நல்லதொரு நூலகமாகவும் உருப்பெறலாம். அனைத்தும் முயற்சியாலே! முயன்று பார்ப்போம் !!

**தொடர்புகளுக்கு:** *Varatharajah, 6B, Champs de la ville, 45500 Gien*, **France.**